Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 288/2024

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | ஆட்டோ ஓட்டுநர் |
| பெயர். | - | கபிலன் | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | | நாராயணன் | சமயம் | - | |
| கிராமம் | - | வழுதரெட்டி | வயது | - | 30 |

11.07.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது வழுதரெட்டியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 26.08.2020 ந் தேதி எடையார் கிராமத்தை சேர்ந்த ஜெகதீஸ்வரி என்பவரை நிச்சயதார்த்தம் செய்வதற்காக சென்றோம். அப்போது அந்த ஊரை சேர்ந்தவர்கள் அந்த பெண்ணை தங்களுக்கு தெரிந்த நபர் ஒருவருக்கு நிச்சயதார்த்தம் செய்வதாக பிரச்சனை செய்தார்கள். அதனால் இது சம்மந்தமாக திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

2. பின்பு போலீசார் காவல் நிலையத்தில் சமரசம் பேசினார்கள். அப்போது கொரணா காரணம் என்பதால் முக்கியமான நபர்களை மட்டும் காவல் நிலையம் உள்ளே அழைத்து சமரசம் பேசினார்கள். அப்போது எதிரி உள்ளே வந்து அங்கிருந்த ஒரு காவலரை பார்த்து தெவுடியா பையா என்று அசிங்கமாக பேசி அந்த காவலரின் சட்டையை பிடித்தார். பின்பு அங்கிருந்தவர்கள் சண்டையை மறித்துவிட்டார்கள். பின்பு இது சம்மந்தமாக புகார் கொடுக்கப்பட்டது. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இது சம்மந்தமாக யார் புகார் கொடுத்தது என்றால் நான் தான். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன், என்னுடன் யார் யார் வந்தார் என்றால் 04.00 மணிக்கு என்னுடைய நண்பர்கள் பாலாஜி, முருகானந்தம், விக்ரம், கலைமணி வந்தார்கள். புகார்எழுதி நாங்கள் ஐந்து பேரும் காவல் நிலையத்தின் உள்ளே போய் கொடுத்தோம் என்றால் ஆமாம். கொரணா காலம் அதிகமாக உள்ளே வராதீர்கள் என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள்.

2. 04.00 மணிக்கு புகார் கொடுத்தோம். எடையாரிலிருந்து அவர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 10 பேர் வந்தார்கள் , அவர்கள் யார் யார் என்று பெயர் எனக்கு தெரியாது. 10 பேரில் 3 பேர் உள்ளே போனார்கள். 04.30 கெல்லாம் விசாரணை முடித்து வீட்டிற்கு போய்விட்டோமா என்றால் 06.00 மணி ஆகிவிட்டது. 06.00 மணிக்கெல்லாம் வீட்டிற்கு போய்விட்டேனா என்றால் ஆமாம்.

3. முதல் விசாரணையில் திட்டியதாக சொல்கிறேனே அது எத்தனை மணிக்கு நடந்தது, அவருடைய பெயர் தெரியுமா என்றால் அவர்கள் வந்த உடனே 04.30 மணிக்கெல்லாம் நடந்தது, கும்பலாக வந்தார்கள், அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் 04.30 மணிக்கு விசாரித்தோடு சரி அதன் பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில், போலீசார் வெளியில் சொல்லி கொடுத்து அதன் பேரில் சொல்கிறேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 288/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | மார்க்கெட்டில் வேலை |
| பெயர். | - | விக்ரம் (எ) விக்கி | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ராமச்சந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | மேலமங்கலம் | வயது | - | 31 |

11.07.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது மேலமங்கலத்தில் வசித்து கோயம்பேடு மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2020 ம் வருடம் என்னுடைய உறவினர் கபிலன் என்பவருக்கு எடையார் கிராமத்தை சேர்ந்த பெண்ணை நிச்சயதார்த்தம் செய்வதற்காக சென்றோம். அப்போது அங்கு பிரச்சனை ஏற்பட்டது. அதனால் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார்கொடுத்திருந்தோம்.

2. அது சம்மந்தமாக இரவு சுமார் 08.00 மணியளவில் போலீசார் சமரசம்பேசினார்கள். அப்போது நான் காவல் நிலையத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருந்தேன். கொரணா காலம் என்பதால் ஒரு சில நபர்கள் மட்டும் அழைத்து பேசினார்கள். அப்போது எதிரிகாவல் நிலையம் சென்று அங்கிருந்த ஒரு காவலரிடம் அசிங்கமாக பேசி பிரச்சனை செய்து காவலர் அணிந்திருந்த சட்டையை பிடித்து இழுத்தார். அதில் காவலரின் சட்டை பட்டன்

அறுந்துவிட்டது.அப்போது எதிரியை காவல் நிலையத்திற்கு உள்ளே அழைத்து சென்றார்கள்.

3.அதன் பிறகு எதிரி பிரச்சனை செய்தது உண்மை தான் என கூறிதான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்தில் யார் யார் உள்ளே இருந்தார்கள், யார் யார் வெளியே இருந்தார்கள் என்றால் கலைமணி, கபிலன், அவரது அம்மா உள்ளே இருந்தார்கள், அவர்களுடன் எடையாரை சேர்ந்த 3 பேர் இருந்தார்கள். நானும், அருள்தாசும் வெளியே இருந்தோம். காவல் நிலையத்தின் உள்ளே விசாரணை செய்துகொண்டிருந்தார்கள், நாங்கள் வெளியே நின்று வேடிக்கை பார்த்துகொண்டிருந்தோம் என்றால் ஆமாம்.

2. வெளியில் வந்து வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் கேட்டிற்குள்ளே கூப்பிட்டு கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்தும் போட்ட பேப்பரில் பேனாவால் எழுதப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து போடவில்லை என்றால் ஆமாம். அதில் என்ன எழுதியிருந்தது என்று என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் ஆமாம், சண்டை நடந்தது உண்மை தான் நீங்க பார்த்தீங்க தானே என்று சொல்லி தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். நான் கையெழுத்து போடும் போது 09.30 மணி இருக்கும். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.